**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**O.S. No. 279/2023**
**Deposition of Witness for the Plaintiff – PW1**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of 01/2025**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **மேகநாதன்** | **Caste:** | |
| **Father/ Husband Name** | **சுப்ரமணியம்** | **தொழில்** | விவசாயம் |
| **Village:** | **வேட்டமங்கலம் கிராமம்** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர்** | **Age :** | 35 |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பு சாட்சியத்தில் நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை என் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணத்தின் தன்மை** | **சான்றாவணம்** |
|---|---|---|---|
| 1. | 09.01.2022 | 1வது பிரதிவாதியின் கணவரும்,2 வது பிரதிவாதியின் தகப்பனாரும் , 3வது பிரதிவாதியின் மகனுமான சரவணன் என்பவரின் வாதிக்கு எழுதிக்கொடுத்த ரூ.5,00,000/–க்கான கடனுறுதிச்சீட்டு அசல் | வா.த.சா.ஆ.1 |
| 2. | 02.03.2023 | வாதி அவரது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீதுடன் கூடியது | வா.த.சா.ஆ.2 |

| | | | |
|---|---|---|---|
| 3. | 06.03.2023 | 1,2 பிரதிவாதிகள் சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் | வா.த.சா.ஆ.3 மற்றும் 4 |
| 4. | 04.03.2023 | 3 வது பிரதிவாதி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் | வா.த.சா.ஆ.5 |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**(பிரதிவாதி வழக்கறிஞர் ஆஜர். கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.)**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு

அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு

படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்

கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒ/ம். திரு. வேடியப்பன்

முதன்மை சார்பு நீதிபதி,

கரூர்.